<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 124/2017 c/w அ.வ.எண். 18/2018**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் சாட்சியம்.

---

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 19.10.2016 தேதியிட்ட முதல் வாதி பெயரிலுள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

2. 25.10.1982 தேதியிட்ட 2ம் பிரதிவாதியும் அவரது சகோதர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

3. 09.08.1963 தேதியிட்ட ராமசாமி கவுண்டரும் மற்றவர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

4. 06.10.1924 தேதியிட்ட பழனிக்கவுண்டரும் மற்றவர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

5. 29.10.1929 தேதியிட்ட பழனிசாமி கவுண்டரும் மற்றவர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

6. 14.08.2017 தேதியிட்ட கணிணி சிட்டா பதிவிறக்க நகல்.

ஆகியவற்றையும்

1. நீதிமன்ற ஆணையர் அறிக்கை

2. நீதிமன்ற ஆணையர் வரைபடம்

ஆகியவற்றையும் வாதி தரப்பு ஆவணங்களாகவும், நீதிமன்ற சான்று ஆவணங்களாகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6** ஆவணங்கள் ஆகவும் **நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.10.24 16:18:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(கூ.மு.பொ),

பல்லடம்.